திரு. என். எஸ். வி. சித்தன் : பேரவைத் தலைவரவர்களே, நான் கேட்டதற்குத் தீர்ப்பு சொல்லுங்கள்.

திரு. துரை முருகன் : தலைவரவர்களே, திரு. சித்தன் அவர்களுடைய பிரச்னை முடியட்டும் என்று இருந்தேன்.** என்றும் சொல்லியிருக்கிறார்கள். அதையும் நீக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர்கள் உட்கார வேண்டும். காலையிலேயே, இந்தக் கட்சி அந்தக் கட்சி என்று சொல்லிக் குற்றம் சாட்டப் பெற்றது. இப்பொழுது மூன்றாவதாக ஒரு கட்சி எழுந்து கொண்டிருக்கிறது,

* *

என்று சொல்லப்பெற்றவைகளைச் சபைக் குறிப்பிலேயிருந்து நீக்கி விடும்படி ஆணையிடுகிறேன்.

திரு. எல். இளையபெருமாள் : ஒரு கிளாரிஃபிகேஷன், இதற்கு முன்புகூட சபையிலே ஒரு டைரக்டர் பற்றி சொன்னது, எடுக்கப்பட்டது என்று அவர் சொல்வதானது, சபாநாயகர் அவர்களும், கனம் அமைச்சர் அவர்களும் சட்டரீதியாக அனுமதிக்கப்பட்டது, ரிட்டையர் ஆன அதிகாரியின் நியமனம் என்று சொல்லியும்கூட மீண்டும் அதைத் தவறாக உறுப்பினர் முத்தையா சொல்வது—தவறான கருத்தை— அதுவும் அமைச்சரவர்கள் சொன்ன பதிலுக்குப் பிறகு சொல்வது, அது சரிதானா என்று தாங்கள் சொல்ல வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரு ரிட்டையர் ஆன அதிகாரி நியமனத்தைப் பற்றி, அவர் பெயர் ஏற்கனவே சபைக் குறிப்பிலேயிருந்து எடுத்தாயிற்று, நீக்கப்பட்டாகிவிட்டது. (கூச்சல் குழப்பம்) திரு. முத்தையா, குற்றச்சாட்டுகள் இல்லாமல் வேறு ஏதாவது இருந்தால் பேசுங்கள். இல்லாவிட்டால் அடுத்தவரைக் கூப்பிட வேண்டியதாக இருக்கும்.

திரு. இரா. முத்தையா : குற்றச்சாட்டுகள் என்று வரும்போது, குற்றச்சாட்டுகளைச் சொல்கிறேன். ஆட்சிக் கலைக்கப்பட்டதற்குப் பிறகு நடந்த நிகழ்ச்சிகளை நான் சுட்டிக் காட்டுகிறேன். இந்தத் துறையைப் பொறுத்தமட்டில் நடந்தது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அன்றைக்கு சட்டமன்றம் கிடையாது. சட்டமன்றம் இல்லாத நேரத்தில், இங்கே * * * * * * *

(கூச்சல், குழப்பம்)

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

(கூச்சல், குழப்பம்)

மாண்புமிகு இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநருடைய செயலுக்கு நோக்கம் கற்பிக்கக் கூடாது. அதுதான் முறை, மரபு, ஆகவே நோக்கம் கற்பிக்க வேண்டிய அவசியத்தை மாண்புமிகு உறுப்பினர் ஏற்படுத்தாமல் வேறு பிரச்னைக்கு செல்லும்படி யாகக் கேட்டுக்கொள்கிறேன். நோக்கம் கற்பித்து கூறிய பகுதியை அவைக்குறிப்பிலிருந்தும் எடுத்து விடலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உறுப்பினர்கள் அவரவர் களுடைய இடத்தில் உட்காரவேண்டும். கவர்னரைப் பற்றிச் சொல்லப்பட்ட கருத்துக்களை அவைக் குறிப்பிலிருந்து நீக்கும் படி உத்தரவிடுகிறேன்.

திரு. இரா. முத்தையா: தலைவரவர்களே, அன்றைக்கு எங்களுடைய மாவட்டத்தினுடைய ஆட்சித் தலைவராக சிரியாக் என்கிற ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரி, எதிர்த்தரப்பிலே இருக் கிறவர்கள்கூட குறைகூறமுடியாத அளவுக்கு ஒரு நாணயமான அதிகாரி, பதவியிலே இருந்தார். அந்த மாவட்டம் முழுவதும் இருக்கக்கூடிய பாமர மக்களெல்லாம் இந்த அளவுக்கு முற் போக்கான எண்ணம் கொண்ட அதிகாரி இருக்க முடியாது என்கிற அளவுக்கு அவரிடத்திலே அன்பு செலுத்தி வந்தார்கள். அந்த அதிகாரியைத் தேர்தல் அறிவித்ததற்குப் பிறகு, அவர் எங்கே நமக்குச் சரியாக இருக்க மாட்டார்களோ என்று கருதி, அன்றைக்கு மாவட்ட ஆட்சித் தலைவராக இருந்த அவரை, உடனடியாக, அவர் ரிலீவ் ஆக வேண்டுமென்ற உத்தரவைப் போட்டு, இன்னொருவரை அந்த மாவட்ட அதிகாரியாக அறிவித்தார்கள். அந்தப் புதிய அதிகாரி, உடனடியாகப் பதவி யேற்க வருகிறார். வருகிறபொழுது, இருக்கிற மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. சிரியாக் அவர்கள் மாவட்டத்திற் குள்ளே, சுற்றுப் பயணம் சென்றிருக்கிறார்கள். அவர் வந்த தற்குப் பிறகு இவர் பதவி ஏற்றிருக்கலாம். அவர் வந்து, அவரிடத்திலே சார்ஜ் கொடுப்பதற்கு முன்னாலேயே இவர் போய் அவர் நாற்காலியில் உட்கார்ந்து கொள்கிறார் என்று சொன்னால், ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரி எந்த விதமான நிர்ப்பந்த மும் இல்லாமல், இந்த அளவுக்கு இன்னொரு அதிகாரி வரு வதற்கு முன்னாலே, நான் பதவியை ஏற்றுக்கொள்கிறேன் என்று ஓடிப்போய் ஏற்றுக்கொள்வாரா?

(பிற்பகல் 1-20)

இதெல்லாம் இன்றைக்கு நிர்ப்பந்தம் இல்லாமல் நடந்த அரசாட்சிக்கு அடையாளங்களா? அதுமட்டுமல்ல, அன்றைய தினம் ஆட்சி கலைப்பை எதிர்த்து எங்களுடைய கட்சித்தலைவர் அவர்களுடைய தலைமையில் ஜனநாயக முற்போக்கு அணியினர் சென்னையில் நடத்திய ஊர்வலத்தில் திட்டமிட்டு கலைப்பதற்